Koviloor Digital Library

# முத்துமாலை

## கவிதைகள்

ஹிந்துமதாபிமான சங்கம்
ஓம்
காரைக்குடி

ரெ. முத்துக்கணேசன்

IMS0710

விற்பனை உரிமை :
பாரி நிலையம்
59, பிராட்வே சென்னை-1

Koviloor Digital Library

முதற்பதிப்பு ; அக்டோபர் 1963.
உரிமை ஆசிரியற்கு

விலை ரூ. 1—25

ஆசிரியரின் பிற நூல்கள்

| | | |
|---|---|---|
| நல்லுரை வெண்பா | (கவிதை) | 1—00 |
| முத்தொள்ளாயிரம் | (உரை நூல்) | 2—00 |
| (சென்னைப் பல்கலைக்கழக வித்துவான் வகுப்பிற்குப் பாடமாக வைக்கப்பட்டுள்ளது) | | |
| தமிழ்த் தொகை | (தொகுப்புரை நூல்) | 1—75 |

அச்சிட்டோர்: தி சௌத் இந்தியா பிரஸ், காரைக்குடி-1

Koviloor Digital Library

# படையல்

காதல் மொழியரசி
கன்னித் தமிழ்ப்பாவை

ஓதும் இனிமை
ஒலியகத்தாள்—பாதத்து

நாவாற் புகழ்பாடி
நன்முத்து மாலையினைப்

பாவாற் படைத்தேன்
பணிந்து!

Koviloor Digital Library

Koviloor Digital Library

# நன்றி

நன்றே வாழி!

இக்கவிதைகள் பல்வேறு பத்திரிகைகளிலும், பல்வேறு சிறப்பு மலர்களிலும், கவி அரங்குகளிலும் வெளிவந்தவை.

இவற்றை வெளியிட்டுப் போற்றிய ஆசிரியப் பெருந்தகையினருக்கும், மலர்க் குழுவினருக்கும், சங்கத்தாருக்கும், நண்பர்களுக்கும் என் உளம் நிறைந்த நன்றி!

வணக்கம்

—ரெ. முத்துக்கணேசன்
காரைக்குடி 20–8–1963

Koviloor Digital Library

Koviloor Digital Library

# பொருள்

பக்கம்

1. கடவுள் வாழ்த்து

தமிழ்

2. தமிழ் வாழ்த்து 15
3. தமிழ்ப் பாவை 16
4. தமிழ் ஊசல் 17
5. தமிழ் அம்மானை 18
6. தமிழ் அணங்கு 22
7. தமிழ்த் தாய் 23
8. தமிழாயிரம் 24
9. தமிழ் மொழியாள் 26

இயற்கை

10. சுடர் வணக்கம் 29
11. செந்தாமரை 31
12. தென்றல் 33
13. வெண்ணிலவு 36
14. கடல் 40
15. மழைக்குமரி 43
16. வைகறை 46
17. மின்மினி 48
18. பொங்கல் வாழ்த்து 49

Koviloor Digital Library

பண்பு

19 பெண்மை 53
20 நாணம் 56
21 விதி 58
22 தன்னம்பிக்கை 59
23 சினம் ஏன்? 60
24 தாலாட்டு 64
25 பொழுதிடைதெரியிற் பொய்யேகாமம் 69

கவிஞர்

26 திருவள்ளுவர் 77
27 குருதேவர் 79
28 கவிமணி 81
29 திரு. வி. க. 83
30 பாரதி 84

Koviloor Digital Library

# கடவுள் வாழ்த்து

வென்று வினை ஒறுக்கும்
வேழ முகத்தானை
நின்று தொழுதிடுவாய்
நெஞ்சே நீ—என்றுமே
ஆற்றல் ஒளிர
அறம்வளரத் தோன்றுபுகழ்
ஏற்றம் பெருகுகவே
என்று!

Koviloor Digital Library

சந்த மொழியோ
சரக்கொன்றைப் பூமணமோ
பந்த மறுக்கும்
படைவீடோ—அந்தமிகும்
அந்தி அழகோ
அரனருள் தான் நெஞ்சே நீ
செந்தீ யனையான் தாள்
சேர்!

பாடல் பலபெற்றுப்
பைந்தமிழாய் வீற்றிருந்து
வாடல் தவிர்த்து
வளமருளிக்—கூடலிலே
மெய்யே மரகதமாய்
மின்னிடுவாள் நெஞ்சே நீ
வையைப் பதியாளை
வாழ்த்து!

Koviloor Digital Library

கொற்றம் உயரக்
குடியுயர இல்வாழ்வில்
சுற்றமொடு பண்புச்
சுடரொளிரப்–பற்றறுக்கும்
கந்தன் முருகன்
கடம்பன் அருட்பேரைச்
சந்ததமும் நெஞ்சேநீ
சாற்று!

கோலத் திருவோ
குறைவகற்றும் பாற்கடலோ
ஞாலம் பிறப்பிக்கும்
ஞானமோ–சாலவே
விண்கூட்டும் வேங்கடத்தான்
தண்ணருள்தான் நெஞ்சேநீ
பண்கூட்டும் தாளிணையே
பாடு!

Koviloor Digital Library

கண்கண்ட வீரமாய்க் காலப்
பயிராய்க் கதிரகமாய்
விண்கண்ட கீர்த்தி விளைவிக்கும்
செல்வப் பொருளகமாய்ப்
பண்கொண்ட இன்கவி பாடிப்
பணிவார் கவியகமாய்த்
தண்கொண்ட தையல் திருவாய்
உறைதாள் வழுத்துவமே!

பேரா யிரம்பெற் றுருவிலாப்
பெம்மான் திருவருளும்
ஆரா அமுதக் கவியால்
விளைமுத் தமிழழகும்
பாரா ருளமகிழ் பல்தொழில்
செல்வப் பொருள்வளமும்
வாரா தனவோ கலைமகள்
பாதம் வழுத்துவோர்க்கே!

Koviloor Digital Library

# தமிழ்



Koviloor Digital Library

Koviloor Digital Library

# தமிழ் வாழ்த்து

கடல்வாய்ப் புகுந்தாய்;
கறையான்வாய்த் தப்பி
இடர்வாய்ப் பலமொழியும்
ஈன்றாய் — படர்தமிழே!
காலப் பிறைகண்டும்
கன்னியென் பாருன்னை
ஞாலத் தவர்மயக்கோ
நன்று!

Koviloor Digital Library

# தமிழ்ப்பாவை

ஆதித் தமிழ்த்தாயே! அள்ளும் மொழிப்பாவாய்!
சோதி குளித்தும் சுடர்மேனி மங்காது

வாதித்தார் கண்முன்னே வைகை எதிர்த்தேறிப்
போதித் தறம்பயிற்றிப் பூம்பாவை தோற்றுவித்து

ஓதி உருகுவார் உள்ளம் கொலுவிருந்து
சாதித்த பேறென்னே! சங்கத் துறைபவளே!

கோதில் இலக்கியங்கள் கொட்டிவரும் வான்மழையே!
தீதிலேன் தாள்பணிந்தேன் தெய்வமே எம்பாவாய்!

முத்தே! மொழியே! முழுவயிரப் பெட்டகமே!
முத்தி எனைவளர்த்து முப்பால் முலையூட்டும்

பித்தி! எனைக்காக்கும் பெண்ணமுதே! பேரருளே!
பத்தி நிலையுணர்த்தும் பாவையே! பாமகளே!

சித்தம் உனதாக்கிச் சீராய் அழகுணர்த்தும்
புத்தப் புதுவண்ணப் பொற்செல்வி! எண்ணமெலாம்

தித்திக்கும் தேனே! திருவா யுறைபவளே!
இத்தரையில் தாள்பணிந்தேன் இன்றமிழே எம்பாவாய்!

Koviloor Digital Library

# தமிழ் ஊசல்

திருவாழும் பொருளாளர் கைகள் கூப்பத்
    திருவடியில் நெடுங்கதைகள் இறைஞ்சி நிற்க
இருபாலும் கலைநூல்கள் புகழை ஓத
    எழுங்கவிதை மணிமுடியில் இணைந்து மின்ன
அருளாளும் இசைப்பாக்கள் ஏற்றம் பாட
    அன்றலர்ந்த சிறுகதையாம் மலர்கள் சூடிப்
பெருவாழ்வின் அறந்தழைக்க ஆடீர் ஊசல்
    பிறங்குமொழித் தமிழ்த்தாயே ஆடீர் ஊசல்!

வையகத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து நின்று
    வானுறையும் தெய்வமா வழிகள் கூறும்
துய்யமொழி முப்பாலாம் ஆரம் ஆடத்
    தொல்சங்கத் தொகைநூலாம் அணிகள் ஆல
செய்யதிரு வாசகங்கள் இசைமு ழக்கச்
    சிவமாக்கும் திருமுறைகள் போற்றி செய்யப்
பெய்மலராம் தனிப்பாக்கள் உதிர ஆடும்
    பேசுமொழித் தமிழ்த்தாயே ஆடீர் ஊசல்!

Koviloor Digital Library

# தமிழ் அம்மானை

அங்கங் குலுங்க அழகொழுகுந் தமிழ்ப்பாவை
துங்கமுறும் மேனியளாய்த் தோன்றுவதேன் அம்மானை;
துங்கமுறும் மேனியளாய்த் தோன்றுவதேன் ஆமாகில்
சங்கங் கொண்டனளோ தமிழ்ப்பாவை அம்மானை
 தமிழ்ப்பாவைபாமகளாய்த் தழைத்தனளே அம்மானை!

இமிழ்கடலாய்ப் புகழேற எல்லையிலா வயதேறத்
தமிழ்த்தாயின் தன்னுருவும் குறுகினதோ அம்மானை;
தமிழ்த்தாயின் தன்னுருவும் குறுகினதே ஆமாகில்
அமிழ்தான திருக்குறளாய் ஆயினளோ அம்மானை
 அமிழ்தானல் மூப்புமில்லை அழிவுமில்லை அம்மானை!

பெய்புகழின் கனிபறித்தார் பிறமொழி யாளரென
மைதவழும் தமிழ்க்கன்னி மயங்குகிருள் அம்மானை;
மைதவழும் தமிழ்க்கன்னி மயங்குகிருள் ஆமாகில்
மெய்தவழும் கோல்மறந்து மெலிந்தனளே அம்மானை
 மெலிவானேன் சிலம்பிருக்க மேதினியில் அம்மானை!

மணிமேகலையென்றும் சூளா மணியென்றும்
அணிபூண்டு விளங்குகிருள் அருந்தமிழே அம்மானை;
அணிபூண்டு விளங்குகிருள் அருந்தமிழே ஆமாகில்
மணிபூண்ட மூவேந்தர் மடிவளர்ந்தாள் அம்மானை
 மடிவளர்ந்த வரிசைகாண் மகளுக்கே அம்மானை!

Koviloor Digital Library

செந்தா மரைமுகத்தாள் செந்தமிழின் செல்வியவள்
வந்த இருள்விலக்கும் வகையறியாள் அம்மானை;
வந்த இருள்விலக்கும் வகையறியாள் ஆமாகில்
அந்தா மரைமொட்டாய் ஆயினளோ அம்மானை
அழகுசிந்தா மணியிருக்க ஆவதேன் அம்மானை!

நாவாரப் போற்றுதிரு நல்ல மலர்தொடுத்துப்
பூவாரம் பூணாத பொற்றமிழாள் அம்மானை;
பூவாரம் பூணாத பொற்றமிழாள் ஆமாகில்
தேவாரம் பூண்ட செயலென்ன அம்மானை
தேவாரம் பூண்ட தெய்வமகள் அம்மானை!

ஆய்தமிழைக் குயிலென்பார் மயிலென்பார் அப்புலவோர்
வாய்திறந்து பேசா மடந்தையோ அம்மானை;
வாய்திறந்து பேசா மடந்தையே ஆமாகில்
வாய்திறவா ஊமையோ? பேசாளோ? அம்மானை
பேசுவதும் செய்யதிரு வாசகமே அம்மானை!

சீர்சிறக்கும் மேனியவள் செம்மனத்தள் பண்தமிழாள்
பேர்சிறக்கப் பிள்ளைபல பெற்றனளே அம்மானை;
பேர்சிறக்கப் பிள்ளைபல பெற்றனளே ஆமாகில்
பார்சிறக்கும் இராமகதை பயின்றிருப்பாள் அம்மானை
பயின்றுவளர் கம்பன்சீர் படைத்தனளே அம்மானை!

Koviloor Digital Library

அப்பாவைத் தானறியாள் அம்மாவைத் தானறியாள்
இப்பாவை தன்கதையும் ஏனறியாள் அம்மானை;
இப்பாவை தன்கதையும் ஏனறியாள் ஆமாகில்
அப்பாவை பெருங்கதையாய் ஆயினளே அம்மானை
ஆயினதும் கதையுரைக்கும் அருந்தமிழோ அம்மானை!

அழகுயரும் தமிழ்க்கொடிதான் ஆன்ற வழிநடையைப்
பழகிநலம் அறியாப் பாவையோ அம்மானை;
பழகிநலம் அறியாப் பாவையே ஆமாகில்
தொழநின்ற அறமனைத்தும் சொற்றனளே அம்மானை
சொன்னதுவும் ஆசாரக் கோவையோ அம்மானை!

தாக்குமொரு உள்நோயால் தன்னுடலம் அல்லலுற
வாக்குடைய தமிழ்ப்பூவை வாடுகிருள் அம்மானை;
வாக்குடைய தமிழ்ப்பூவை வாடுகிருள் ஆமாகில்
காக்குதிரு நல்மருந்து காவாதோ அம்மானை
காத்திடுமே திரிகடுகம் கன்னிதனை அம்மானை!

மூலப் பொருள்வடிவாம் முத்தமிழாள் கருவறையில்
கோல உருத்தாங்கிக் கொலுவிருந்தாள் அம்மானை;
கோல உருத்தாங்கிக் கொலுவிருந்தாள் ஆமாகில்
ஞால மதில்உலவா நங்கையளோ அம்மானை
நங்கையரில் உலாப்பெற்ற நாயகிகாண் அம்மானை!

Koviloor Digital Library

கூடிவரும் கூத்தவையில் கூட்டிடுவார் கைவழியே
ஆடிவரும் பாவைஉருக் கோதையோ அம்மானை;
ஆடிவரும் பாவைஉருக் கோதையே ஆமாகில்
பாடிவரும் திருப்பாவை பயின்றதென்ன அம்மானை
பயின்றவளும் எம்பாவைப் பைந்தமிழாள் அம்மானை!

இன்ப முதுமொழியின் இசையெல்லாம் ஆய்ந்தாங்கு
மன்பதையில் தேர்ந்துரைக்கும் மாத்தமிழாள் அம்மானை;
மன்பதையில் தேர்ந்துரைக்கும் மாத்தமிழாள் ஆமாகில்
அன்புக் குழவிமொழி அறியாளோ அம்மானை
அறிந்திடுவாள் பிள்ளைமொழி ஆயிரமே அம்மானை!

முத்துப் பல்வரிசை முகங்காட்டும் இச்செல்வி
தத்தி மொழிபேசும் தமிழ்மாதோ அம்மானை;
தத்தி மொழிபேசும் தமிழ்மாதே ஆமாகில்
இத்தரையில் வெண்பாவை இசைத்தனளே அம்மானை
இசைத்ததுவும் நல்லுரை வெண்பாவோ அம்மானை!

Koviloor Digital Library

# தமிழணங்கு

நீதி மொழியுரைப்பார்
    நெஞ்சுறைவாய் அவ்வுரையை
வாதித் துரைப்பார்தம்
    வாய்வாழ் ஈவய்—தாதித்
தமிழணங்கே! நீகொண்ட
    தாய்மைப்பே ருலோ!
அமிழ்துறவால் நஞ்சும்
    அமுது!

Koviloor Digital Library

# தமிழ்த்தாய்

கலையாகிக் கருத்தாகி ஒலியாகி
எழுத்தாகிக் கவியு மாகித்

தலையாகி அகமாகிப் புறமாகித்
தவமாய குறளு மாகி

நிலையாகிச் சிலம்பாகிக் கதையாகி
நினைவிலுறு துதியு மாகிச்

சிலையாகி அறமாகி ஒளிர்கின்ற
தமிழ்த்தாயைச் சிந்தை செய்வாம்!

Koviloor Digital Library

# தமிழாயிரம்

தைபிறந்து வழிபிறக்கத் தம்வாழ்வு நிலைபெருகக்
கையொலித்துப் பாடுகும்மி கலைத்தமிழும் ஆயிரமே!

தன்குழவி அழுகையிலே தாய்மனமே இசையாகித்
தன்மொழியில் தாலாட்டும் தாய்த்தமிழும் ஆயிரமே!

அள்ளுசுவை நெற்பயிரை அணைகின்ற போதையிலே
பள்ளுமொழி யாய்ப்பிறக்கும் பைந்தமிழும் ஆயிரமே!

அழகுமொழி நடைபயின்று ஆய்ந்துண்மை நின்றுரைக்கும்
பழகுமொழிப் பழமொழியாம் பசுந்தமிழும் ஆயிரமே!

பூவிரிய மணம்பிறந்து பூப்பதுபோல் தமிழ்க்காதல்
பாவிரிய அகமுரைக்கும் பழந்தமிழும் ஆயிரமே!

தோன்றிப் புகழ்பெறவே தோன்றியிங்கு வீறெய்தும்
சான்றோர் புறமுரைக்கும் சங்கத்த மிழாயிரமே!

சீரடியால் வாழ்வுண்மை செப்பியே இவ்வுலகை
ஈரடியால் அளந்தகுறள் எழுந்ததமிழ் ஆயிரமே!

நாவார ஐந்தெழுத்தில் நங்கையுடல் பாதியனைத்
தேவாரத் துதிபாடும் தீந்தமிழும் ஆயிரமே!

Koviloor Digital Library

ஊனுருக்கி என்புருக்கி உலப்பிலா ஆனந்தத்
தேன்பெருக்கும் வாசகமாம் தெள்ளுதமிழ் ஆயிரமே!

ஆயிரம்வாய்ப் பாம்பணையில் அறிதுயில்வோன் பேர்வாழ்த்த
ஆயிரம்பாத் திருமொழியாய் அமைந்ததமிழ் ஆயிரமே!

தொன்மைசால் பூவலயம் தொடமணக்கும் கம்பன்பா
சொன்னவர்தம் நாமணக்கும் சொற்றமிழும் ஆயிரமே!

பார்க்கின்ற ஊர்ப்புகழைப் பரம்பொருளின் தண்ணருளை
ஈர்க்கின்ற புராணங்கள் ஈந்ததமிழ் ஆயிரமே!

தரணியெலாம் வீரத்தால் தாளும் மன்னவர்க்குப்
பரணிபல பாடுகின்ற பண்தமிழும் ஆயிரமே!

துள்ளுமொரு வனப்பினிலே தோய்ந்தெழுந்த இன்பமெலாம்
பிள்ளைப்பேர் மொழியுருவில் பிறந்ததமிழ் ஆயிரமே!

அத்தன்தன் ஒளிவிளக்கால் அறியாமை இருளகற்றும்
சித்தர்தம் செம்மொழியாம் செந்தமிழும் ஆயிரமே!

புத்தொளியாய்ப் பொன்னொளியாய்ப் பூவொளியாய்த் தெய்விகமாம்
முத்தொளியாய் முகிழ்த்ததமிழ் ஆயிரம்நூ றாயிரமே!

Koviloor Digital Library

# தமிழ் மொழியாள்

பேராள நூல்பலவும் பிறப்பிப் பாளை
    பிறங்குபுகழ் வானகத்தே கவிஞர்க் கென்றும்

வாராத நற்செல்வம் வழங்கு வாளை
    வளமார்ந்த வாசகமாம் குறளே ஆகி,

தீராத நோய்பலவும் தெளிவிப் பாளைச்
    சிந்தையுளே தித்திக்கும் செந்தேன் ஆய

சீராளை வாழ்வுண்மை செப்பு வாளைச்
    செந்தமிழாம் மொழியாளைச் சிந்தை செய்வாம்!

Koviloor Digital Library

# இயற்கை



Koviloor Digital Library

Koviloor Digital Library

# சுடர் வணக்கம்

காலப் போக்கில் உனைக்கண்டார்
கல்லில் தோன்றி மறைந்திட்டாய்

ஞாலம் வாழப் பெருங்கனலாய்
நாளும் பிறந்து நடம்புரிவாய்!

மங்கை பலரின் கைச்சிவப்பால்
மகிழ்ந்துன் மேனி சிவந்ததுவோ!

அங்கை நெல்லிக் கனிபோலுன்
அழலாம் மேனி காட்டுதம்மா!

உண்ணும் உணவைச் சமைத்திடுவாய்
ஊர்தி பலவும் ஓட்டிடுவாய்!

விண்ணும் மண்ணும் உன்கையில்
விந்தைச் செயலுக் கிணையுண்டோ!

Koviloor Digital Library

விழுங்கும் இருளோ உன்உணவு
வேலுன் னுருவைப் பெற்றதுவோ!

விழுங்கும் அச்ச நிலைபோக்கி
விளக்காய்க் காப்பாய் விளங்கிடுவாய்!

உள்ளச் சுடரே! ஒண்பொருளே!
உயர்ந்தோர் உணர்வில் உறைபொருளே!

உள்ளம் வணங்க வாழ்வினிலே
ஒளிர்வாய் தெய்வ விளக்கேநீ!

Koviloor Digital Library

# செந்தாமரை

இதழாற் சுருண்ட அரும்பேநீ
இனிய மணத்தை ஏந்துநிலை

இதமாய்க் கருவைத் தாங்குந்தாய்
எழிலாய்ச் சிவந்து பொலியுதம்மா!

விண்ணை நோக்கும் கூரரும்பில்
விளையும் அழகுக் கீடாமோ!

மண்ணை உண்ட வாயழகன்
மகிழ்வாய் ஏந்தும் சங்காமோ!

ஆய கலையும் விழிபெறவே
அன்புக் கதிரும் முன்எழவே

தூய கையால் உனைத்தொடவே
துய்த்து நாணிச் சிவந்தனையோ!

அணைந்து கொழுநன் நலந்துய்க்க
அலர்ந்தே இன்பம் தான்கொடுக்கப்

பிணைந்த செய்கை பின்எழவே
பெரிதும் நினைந்து சிவந்தனையோ!

Koviloor Digital Library

விண்ணில் கொழுநன் உலாவரவை
 விழித்து நோக்கித் தாழாமல்
மண்ணில் நாணி இதழ்விசி
 மகிழ்ந்து கூடிச் சிவந்தனையோ!

பழகு தமிழில் பாவையர்க்குப்
 படைக்கும் கலவிச் சொற்களிலே
அழகு முலைக்கே உனைக்கூற
 அதற்கு நாணிச் சிவந்தனையோ!

நல்ல மலராய் வாழ்ந்தாலும்
 நாளின் முடிவில் வீழ்வதனை
மெல்ல மெல்ல இதழ்விரித்தே
 மெதுவாய்க் கலங்கிச் சிவந்தனையோ!

சுற்றிப் பசுமை இதழ்மேவச்
 சுடராய் நடுவில் பூப்பதுவோ
பற்றித் தேவி சேர்ந்தனையும்
 பரமன் உருவைக் காட்டுதம்மா!

Koviloor Digital Library

# தென்றல்

ஆடிய மலராள் மேனி
 அணைத்தங்கே முத்த மிட்டுக்

கூடிநீ இன்பந் துய்ப்பாய்;
 குவலய மாந்தர் கூட்டம்

நாடிய மணத்தை நல்கி
 நைந்தவர் நாளும் நாளும்

தேடிய பொருளே இன்பத்
 தென்றலே வாழி! வாழி!

படுத்தவர் எழுந்து முன்போல்
 பண்புடன் வாழும் வாழ்வைத்

தடுத்திடும் கயவ ருக்கே
 தகுநிலை உணர்த்து தற்கோ

கிடைத்தநற் பொருளை எல்லாம்
 கிடைத்தது மேந்திச் சென்றே

அடுத்தவர்க் கீவாய் அம்மா!
 அறத்தினுக் குலகம் போதா!

Koviloor Digital Library

காதலில் தோற்ற பேரும்
கலவியில் வென்ற பேரும்
ஓதலைக் கொண்ட பேரும்
ஒண்மையை அடைந்த பேரும்
தீதிலா துழைத்த பேரும்
தெளிவிலா தலைந்த பேரும்
ஆதரம் நீயே யென்பர்
அகிலத்தின் மூச்சு மாவாய்!

காலத்தின் பருவங் காட்டக்
கடுங்குளிர் வாடை யாவாய்
ஞாலத்தில் குற்றங் காண்கில்
நவிலொணுப் புயலாய் நின்றுன்
கோலத்தைக் காட்டிப் பின்பு
குளிர்தவழ் தென்ற லாவாய்
சீலத்தை உன்றன் சீரை
யாவரே செப்ப வல்லார்!

Koviloor Digital Library

கூட்டினில் மருள நோக்கும்
குஞ்சுகள் மகிழக் கொஞ்சி
நாட்டினில் உயிர்கள் உள்ளம்
நாளும்நீ ஓம்பு கின்ருய்!
வாட்டிடும் வெம்மை தாழ
வயல்வழி நடந்து வந்தே
காட்டிடும் பரிவை என்ஞல்
கழறிடப் போமோ! சொல்லாய்!

காதலில் தோல்வி யுற்ருே
கையிதழ் பொத்தி நிற்கும்
ஏதமில் அல்லி நாண
இன்மொழி பேசு தற்கோ
மோதுதல் அகற்றி யிங்கு
மோகனத் தென்றலாய்நீ
போதெலாம் வீசு கின்ருய்
புவியெலாம் வாழ்த்தும் நன்றே!

Koviloor Digital Library

# வெண்ணிலவு

பொட்டுடல் நிலவே வானில்
புத்துலாக் காட்சி கண்டோம்

கட்டுடல் ஆடிக் காட்டிக்
களிப்புடன் வணங்கும் மீன்கள்

பட்டுடல் ஆடை போர்த்தும்
பரிவுடன் மேகக் கூட்டம்

விட்டுடல் நீங்காக் காதல்
விழைந்திடும் பெண்கள் உள்ளம்!

விரித்திடும் தோகைப் பூக்கள்
விழித்திடும் உருவைக் கண்டு

சிரித்திடும் மண்ணில் நின்று
சிலிர்த்திடும் அல்லிப் பூவே!

எரித்திடும் இன்ப வேட்கை
இளைத்திடும் உள்ளம், சட்டை

உரித்திடும் பாம்பு போல
உதிர்த்திடும் சாதி மல்லி!

Koviloor Digital Library

இருட்டினைக் கிழித்த உன்றன்
இன்பத்தேன் ஒளியை மாந்தி

இருட்குகை அடையும் புட்கள்
இன்னொலிக் குயில்கள் மன்னன்

அருட்டிருப் புகழைப் பாட
அழிவிலா ஆட்சிச் செங்கோல்

உருட்டினை நாட்கள் தோன்ற
உதவுமுன் பண்பு வாழி!

இல்லத்தை அகன்று நாளும்
இருளெனும் மங்கை நல்லாள்

மல்லிகைப் பூக்கள் சூடி
மருவிடச் செல்லு தற்கு

வல்லிருள் விலக்கி வானில்
வழிகாட்டும் விளக்கே! இன்பால்

புல்லிய விழிக ளுக்குப்
பொலிவூட்டும் நிலவே வாழி!

Koviloor Digital Library

பாய்புனல் நுரையின் வெண்மை
படிந்திடும் உன்றன் மேனி
தூய்நிறை படிவக் கல்லோ?
தூமொழி மடவார் தங்கள்
பாய்பிணைக் காதற் கண்மேல்
பதிந்திடும் புருவ வில்லோ?
வாயுறை வாழ்த்துப் பாடும்
வளர்தமிழ் மொழியாய் வாழி!

பொன்னொளி அஃரியே தானும்
புதுக்கிடில் புதுமை தோற்றும்
மின்னொளி வயிரக் கூட்டம்
மினுக்கிடத் தேய்த்தல் வேண்டும்
உன்னொளி மறைத்து மேகம்
உருவினைத் தடவ ஆங்கே
தன்னொளி பெருக வீசும்
தனிப்பிறைத் தலைவ வாழி!

Koviloor Digital Library

பெண்மையும் ஆண்மை தானும்
பிணைப்பினில் ஒன்றச் செய்யும்

வெண்மையை அமுதப் பாலை
விரித்திட்டாய் எண்ணிப் பார்க்கின்

உண்மையைச் செயலில் சொல்லில்
உயிரெனக் கொண்டே அன்புத்

தண்மையில் ஞாலம் வாழத்
தலைப்பொருள் விடுத்தாய் வாழி!

Koviloor Digital Library

# கடல்

வளர்ப்பு நிலை

கார்விரிந்து மழைபெருகக்
கடலேநீ காலூர்ந்து
நாட்டைத் தொட்டால்

ஊர்விரிந்து நகராகி
ஒப்பரிய துறைபலவும்
நிலைத்து வாழும்

பார்விரிந்து வாணிபத்தால்
நட்பாகிப் பலநாடும்
ஒன்று சேரும்

பேர்விரிந்து குலந்தழைக்கப்
பெருங்கலைகள் வளர்ப்பதுன்றன்
சீல மன்றோ!

Koviloor Digital Library

## மறைப்பு நிலை

முத்தோடு பவளமுதல்
முழுவயிரம் அத்தனையும்
சேர்த்து வைப்பாய்

பித்தோடு வெறுப்புணராச்
சால்பினராய்ப் பிறங்கிடுவார்
போலி ருப்பாய்

கொத்தோடு மருந்தனைத்தும்
உள்ளடக்கிக் கொடுநோயைப்
போக்கு வாய்நீ!

அத்தடியோ! ஆழ்கடலே!
உன்பெருமை ஆருரைக்க
வல்லார் தாமே!

Koviloor Digital Library

அழிப்பு நிலை

தலைவிரித்துப் பெரும்பூதப்
பேரொலித்தே ஆர்ப்பரிப்பாய்;
தாவிச் செல்வாய்;

அலைவிரித்து நீர்ப்பெருக்கால்
அழித்திடுவாய் பொருளனைத்தும்;
மீனர் தங்கள்

வலைவிரித்துப் பட்டினியால்
வாய்கட்டி உனையடைந்தால்
ஒருகால் ஈவாய்

மலைபிரிப்பாய் ஊரழிப்பாய்
மாகடலே! சினந்திட்டால்
செய்வாய் நீயே!

Koviloor Digital Library

# மழைக்குமரி

வாலை மழைக்குமரி
 வாழ்வனைத்தும் நல்குதற்கோ
சேலையுடல் நூல்போல்
 சிறுதூறல் போடுகிருள்-சாலையெலாம்

தன்வருகைக் கட்டியங்கள்,
 சேர்ந்து புகலுதற்கோ
முன்பாய்ப் படைமரங்கள்
 முன் வளர்க்கும்-இன்புடையாள்

கப்பங்கொள் காவலரும்
 கால்வயிற்று ஏழைகளும்
ஒப்ப வரவேற்கும்
 ஒய்யாரி-செப்பமுடன்

Koviloor Digital Library

கூடுமண மக்கள்
குலம்விளங்கி நற்செல்வம்
நாடும் வகைசெய்யும்
நாச்சியளோ – தேடுபுகழ்

மக்களெலாம் தம்கருத்தில்
மாறிடினும் ஒற்றுமையாய்
ஒக்க நினைக்கின்ற
ஒப்பிலாத் - தக்கவள்காண்

தன்சக்தி ஒன்றுமிலைத்
தாயே வருகவென
இன்கையால் கூப்புதலை
ஏற்றுணர்ந்த – தன்மையிலே

Koviloor Digital Library

தான்மகிழ்ந்து புன்னகையாய்ச்
சிந்தினளோ இத்தூறல்
கான்மகிழப் பூமகிழத்
தூவினளோ – வான்முத்தை

வானகத்துச் செய்தியினை
வாழ்த்து மொழியதனைத்
தானகத்து ஏந்திவரும்
தூதுவளோ - தேன்தூறல்

நெற்கதிராம் மக்களுடல்
நீட்டி அணைக்கவரும்
பொற்கையோ புத்தூறல் தான்!

Koviloor Digital Library

# வைகறை

எல்லையிலா வான்மங்கை
இனிமைத் துயிலகல
வில்லுருவப் புருவவிழி
விரிவதுதான் வைகறையோ!

அடர்இருளின் காலடியை
ஆய்ந்திங்கு தேடுதற்குச்
சுடர்ப்பொருள்தான் முன்விடுத்த
தொடர்ஒற்று வைகறையோ!

கட்டுக் குலையாத
கன்னியவள் பொன்மேனி
தொட்டுப் பின் நீங்கும்
தூய்பசலை வைகறையோ!

Koviloor Digital Library

உள்ளமுறை ஊடலுக்கே
 உட்பட்டுக் கலந்தபின்
மெல்லமெல்ல மனந்தெளிந்த
 மென்னகைதான் வைகறையோ!

காரனைய கற்பாறைக்
 கல்லிடையே ஊறிவரும்
நீரனைய நிறங்காட்டும்
 நீளுருவம் வைகறையோ!

மோனத் தவமிருந்து
 முழுமையுறும் ஞானியர்தம்
ஞானத் தெளிவாமோ
 ஞாலமலர் வைகறையே!

Koviloor Digital Library

# மின்மினி

மின்மினி யொன்று மின்னுதுபார்—அதோ
மின்மினி யொன்று மின்னுதுபார்!

கண்ணில் துளும்பும் காமம் போல
காலை நீங்கும் கங்குல் போல
விண்ணில் நிகழும் மின்னல் போல
வீறிட் டலறும் வெறுமை போல

மின்மினி யொன்று மின்னுதுபார் – அதோ
மின்மினி யொன்று மின்னுதுபார்!

Koviloor Digital Library

# பொங்கல் வாழ்த்து

1

விண்விளங்கக் கண்திறந்து
    விரிமலரை முத்தமிட்டு
மண்விளங்க ஒளிவீசும்
    மாகதிரை வணங்குதுமே;

பேர்விளங்க நலஞ்செழிக்கப்
    பேசுதமிழ் மொழியினிக்க
ஏர்விளங்கக் குலந்தழைக்க
    எழும்பொங்கல் வாழ்கவென்றே!

2

விரிந்த கதிரைப் பாடீரே
    விளைந்த நெல்லைப் பாடீரே
விரிந்த மலரைப் பாடீரே
    விழைந்து நிலத்தைப் பாடீரே!

பொங்கும் பொங்கல் வாழியவே
    புதுமைத் தமிழும் வாழியவே
எங்கும் தமிழர் வாழியவே
    எழிலார் இன்பம் வாழியவே!

Koviloor Digital Library

3

கதிரை வணங்குதுமே! கதிரை வணங்குதுமே!
அதிர வருநோயும் அடங்கப் பிறந்தொளிரும்
கதிரை வணங்குதுமே! கதிரை வணங்குதுமே!

உள்ளம் மலர்ந்தருள உலகு செழித்தருள
அள்ளற் பழனமதை மேவி அமர்ந்தருளும்
கதிரை வணங்குதுமே! கதிரை வணங்குதுமே!

குழவி நகைகுலுங்கக் கோதை மணம்புணர
பழகு தமிழ்முழங்கப் பாரில் குலம்வளரக்
கதிரை வணங்குதுமே! கதிரை வணங்குதுமே!

Koviloor Digital Library

# பண்பு



Koviloor Digital Library

Koviloor Digital Library

# பெண்மை

அங்கங் குலுங்க
    அசைகின்ற உன்னழகும்
பொங்கிவரும் புன்சிரிப்பும்
    பூவுலகச் செல்வமம்மா!

கள்ளக் கருவிழியில்
    காணும் கருத்தெல்லாம்
உள்ளத்தின் ஆசையினை
    ஒவ்வொன்ருய்க் கூறுதம்மா!

ஆழ நெடுங்கண்ணே
    அன்புக் குமிழியிட்டுச்
சூழும் அழகைச்
    சுமந்துவரும் நீர்நிலையோ!

ஆவி தனைப்பற்றி
    அள்ளும் முலைக்கண்ணே
மேவி எமையிழுக்கும்
    மேன்மைதா னென்னேயோ!

Koviloor Digital Library

உன்மேனி மார்பில்
உருவாகும் எண்ணமெலாம்
விண்காணும் மீனில்
விளையாடி நிற்பதென்னே!

பாங்காய் வளர்ந்திட்ட
பச்சை மலர்க்கொடியே
தாங்காது பற்றித்
தளராது படர்ந்தனையோ!

உண்மையும் கற்பனையும்
ஒன்ருகி உட்கலந்து
பெண்மை உருவாய்ப்
பெரிதும் பிறந்தனையோ!

செடியின் வளமையெலாம்
சேர்ந்தொளிரும் பூவினைப்போல்
படியினிலே பெண்மையாய்ப்
பாவைநீ தோன்றினையோ!

Koviloor Digital Library

கோடிவளம் உள்ளடக்கிக்
　　கூடும் மழைத்துளிபோல்
நாடிவரும் பெண்மையெலாம்
　　நானிலத்தில் வாழ்வாமோ!

ஆணிப்பொன் முத்தாய்
　　அமைந்தருளும் பெண்மையே!
பேணி யுலகினையே
　　பேரின்ப மாக்குகநீ!

Koviloor Digital Library

# நாணம்

உள்ளம் முகிழ்க்கும்
உணர்வதனில் தான்பிறந்து
வெள்ளமென ஓடும்
விரியாரோ இந்நாணம்!

இன்பக் குறும்பனைத்தும்
இன்காதல் மன்னனுக்காய்
அன்புப் பரிசை
அளிக்கவரும் மங்கையிடம்

தட்டிப் பறிக்கும்
தயையற்ற கள்வனோ!
இட்டமுடன் ஆட்டி
இமையாகி ஆள்பவனோ!

Koviloor Digital Library

கண்ணென்றும் முத்தென்றும்
கட்டி யணைப்பார்க்கு
வண்ணமொழிகூருது
வாயடைக்கும் மேலவனே!

ஆர்வமுடன் காதலன்பால்
ஆயிரமாய்ப் பேசுதற்கு
நேர்மாருய் முன்னிற்கும்
நீண்ட தடைக்கல்லோ!

வேதனையாம் துன்பம்
மிகக்கொடுத்தே வேண்டுமட்டும்
சோதனைகள் செய்யும்
சுடர்க்காதல் சேவகனே!

நீதி நெறிதவறும்
நெடுமரம் போல்வார்க்குச்
சேதி உணர்த்திப்பின்
சீர்ப்படுத்தும் கூர்வாளோ!

நீதிக்கும் நேர்மைக்கும்
நெஞ்சுவக்கும் காதலுக்கும்
தாதிப் பொருளாகித்
தாயாதல் நாணமன்றே!

Koviloor Digital Library

# விதி

அதிர்கின்ற ஒலியெல்லாம் முரசாகுமா?
உதிர்கின்ற இலையெல்லாம் மலராகுமா?

புரிகின்ற செயலெல்லாம் பயனாகுமா?
சரியென்ற சொல்லெல்லாம் ஒப்பாகுமா?

கண்கண்ட பொருளெல்லாம் கலையாகுமா?
மண்கண்ட வினையெல்லாம் மதியாகுமா?

விழைகின்ற எண்ணெல்லாம் நிலையாகுமா?
தழைகின்ற விதிதானே வாழ்வாகுமே!

Koviloor Digital Library

# தன்னம்பிக்கை

ஒலிபோல் உண்மை உணர்பொருளே
    உயர்ந்தோர் உளத்தில் வளர்பொருளே
நலியா உள்ளம் தருபொருளே
    நட்பாய் என்னுள் மலர்பொருளே
களிப்பே நல்கும் கலைப்பொருளே
    காக்கப் பிறந்த கருப்பொருளே
வளிபோல் உயிர்ப்பாய் வாழ்பொருளே
    வந்தே என்னுள் இருபொருளே!

Koviloor Digital Library

# சினம் ஏன்!

[மலர் நிறைந்த சோலை; மாலைப்
பொழுது; தலைவன் தலைவிக் கிடையே
ஊடல்; பேசாதார் இருவரும்
மலரை நோக்கிப் பேசும் கவிமொழி—]

**தலைவன்:-**

பூத்த மலரே சொல்வாய்நீ
புதுமை கொழிக்கும் முகங்காணேன்
பூத்த கொண்டை முகங்காட்டப்
பொருந்து சினமேன் கேள் நீயே!

**தலைவி:-**

அந்திப் பொழுதும் வந்தாச்சு
அல்லிப் பூவும் பூத்தாச்சு
பிந்தி வந்த காரணமேன்
பின்னும் பூவே கேள்நீயே!

Koviloor Digital Library

தலைவன்:-

சுரும்பு போல வரவிருந்தேன்
 சொன்ன சொல்லைக் காப்பதற்குக்
கரும்பு போலும் கனிவுடையாள்
 கையைத் தொட்டாள் வசமானேன்!

தலைவி:-

அள்ளிச் செருகி அணையாமல்
 அலர்ந்து கிடக்கும் பூவேநீ
கள்ளி தொட்ட கைமயக்கில்
 களித்த உரையைக் கேளாயோ!

தலைவன்:-

பிடித்த பிடியைச் சொல்கேனோ
 பிணைந்த செய்கை சொல்கேனோ
வடித்த அன்பை வாழ்த்தேனோ
 வாய்த்த உரையை வாழ்த்தேனோ!

Koviloor Digital Library

மேதினி ஒலிக்கச் சிலம்பிசைத்தாள்
    மேகலை நழுவ எனையடைந்தாள்
காதினில் சிந்தா மணிவீசக்
    காவியப் பாவை எனைத்தழுவத்

தேனில் ஊறிய மலரானேன்
    தீஞ்சுவை நல்கும் கவியானேன்
வானில் மிதக்கும் விடிதுவோ
    வாய்த்த மொழியாள் வாய்முத்தம்!

தலைவி:-

போதும்! போதும்! நீர்நிறுத்தும்
    பூவை அனலிற் போடுவரோ!
ஏதும் உரையீர் நீர்செல்லும்
    என்றன் வாழ்வும் நீர்நிலைக்கே!

தலைவன்:-

கொல்லும் விழியும் சிவந்திடவே
    கூர்மை மார்பும் கொதித்திடவே
கல்லும் சொல்லால் பிளந்திடவே
    கனலாய்ச் சினமும் கொள்வானேன்?

Koviloor Digital Library

அமிழ்தா முன்னை அடைவதற்கே
ஆவி யன்போ டெழுந்தேன் நான்
தமிழாம் கன்னி எனைத்தொட்டாள்
தயங்கி வந்தேன் பொறுத்திடுவாய்!

தலைவி:-

மலர்ந்த மதியில் நிழல்விழல்போல்
மதியில் சினத்தின் நிழல்மேவ
மலர்ந்த மணத்தைத் தானறியா
மலராய் ஆனேன் பொறுத்தருள்வீர்!

Koviloor Digital Library

# தாலாட்டு

ஆராரோ! ஆராரோ!
ஆரிவரோ! ஆராரோ!

கண்ணே உறங்கு!
கலைமணியே நீயுறங்கு
கண்ணே உறங்கு!
கலைத்தமிழே நீயுறங்கு

கண்ணுறங்கு நீயுறங்கு
கண்மணியே நீயுறங்கு
மண்ணுறங்க நீயுறங்கு
மாதவமே நீயுறங்கு!

வண்டாடும் சோலை
வளர்த்தெடுத்த மாமலரே
கொண்டாடும் பூமணமே
குஞ்சரமே! கண்வளராய்!

கண்ணோடு கண்கள்
கலக்கப் பிறந்திட்ட
வண்ணப் பெருங்காதல்
வார்த்தெடுத்த சித்திரமே

Koviloor Digital Library

முத்தே! மணியே!
முழுவயிரப் பெட்டகமே!
கொத்தே! மலர்க்கொழுந்தே!
கோகிலமே! கண்வளராய்!

அல்லிப்பூ மொட்டாலே
ஆய்ந்தமலர்த் தேன்தொட்டுப்
புல்லி வரைந்ததொரு
பொன்னுருவோ உன்னுருவம்

உள்ளத்தின் ஆசையெலாம்
ஒருருவம் தாங்கியே
பிள்ளையாய் வந்து
பிறந்தனையோ கண்வளராய்!

சேரச் சுவையளிக்கும்
செங்கரும்போ உன்விழிகள்
மாரன் கணையாமோ
மாவடுவோ உன்விழிகள்

எண்ணப் பிறப்போ
எழிற்கவிதை தன்நிலமோ
வண்ணப் பெருவாழ்வோ
வாய்த்ததிருக் கண்கள்!

Koviloor Digital Library

ஆயிரமாம் ஆண்டை
அடைந்தாலும் வாழ்வினுக்குப்
பாயிரமாய் உன்விழியை
ஈசன் படைத்தானே!

தாயின் முகம்பார்க்கத்
தாயன்பாம் பூமலரும்
சேயொளியோ உன்கண்கள்
செல்வமே கண்வளராய்!

நெற்றித் திலகமிட்டு
நீதவழ்ந்து ஊர்கையிலே
வெற்றி யுனையடைய
வேறுதவம் செய்யுமம்மா!

உள்ளம் அறிந்தே
உறவாகி ஈவார்தம்
உள்ளம்போல் நெற்றி
உயர்ந்ததுவோ கண்வளராய்!

ஏழை எளியருக்கும்
இல்லறத்தில் இன்பளிக்கும்
வாழைத் தனிப்பூவோ
வாய்த்த இளமூக்கு

Koviloor Digital Library

சங்கின் அலகாமோ
சண்பகத்தின் பூவாமோ
அங்கம் குளிர்விக்கும்
அள்ளுசுவைக் கன்னங்கள்

ஓங்கி உலகளந்த
உள்ளுணர்வுப் பேரன்பை
வாங்கித் திருமுகத்தில்
வைத்தொளிர்வாய் நீயுறங்கு!

சொல்லுமொரு சொல்லுருகச்
சொற்றமிழின் பாவுருக
வெல்லுமொரு வாக்காய்
விளையமுதே நீயுறங்கு!

தெய்வத் திருவருளோ
தீம்பால் அமுதூற்றோ
செய்ய திருக்கரத்தாய்!
செம்மணியே கண்வளராய்!

ஆக்கப் பொருள்கொடுக்கும்
அஞ்சேல் எனக்காட்டும்
காக்கு மிருகையாய்!
கட்டழகே கண்வளராய்!

Koviloor Digital Library

தண்டைச் சிலம்பதிரும்
தாள வினையதிரும்
இண்டைக் கொடிபோல்நீ
என்முன்னே ஆடுகையில்

ஆடிநீ நின்ருலோ
அவ்வழகு நெஞ்சினையே
சாடி இழுக்குதம்மா
சந்தனமே கண்வளராய்!

பழகு தமிழ்த்தேனின்
பாவாமோ என்றன்
அழகுக் களஞ்சியமே
ஆரமுதே நீயுறங்கு!

கண்ணே உறங்கு
கலைமணியே நீயுறங்கு
கண்ணே உறங்கு
கலைத்தமிழே நீயுறங்கு!

கண்ணுறங்க நீயுறங்கு
கண்மணியே நீயுறங்கு
மண்ணுறங்க நீயுறங்கு
மாதவமே நீயுறங்கு!

Koviloor Digital Library

# 'பொழுதிடை தெரியிற் பொய்யே காமம்'

— குறுந்தொகை : 32

வணக்கம்

பொன்ருத பன்னூல்கள் புகட்டிக் கல்விப்
பொருள்வழங்கும் தலைவர்பொன் னடியேபோற்றி
நன்ருகத் தமிழ்க்கவிதை நாட்டு வோர்க்கும்
நற்கழகப் பேரவைக்கும் வணக்கம் நன்றி!

குறுந்தொகை வாழ்த்து

நிலந்தழைக்க உயிரெழுந்து நாட்கள் செல்ல
நினைவெழுந்து நடமாடக் காலம் ஏகப்
புலந்தழைக்க உணர்வெழுந்து வேற்று நாட்டில்
பொன்ருத பழம்பாடல் தோன்ரு முன்னர்க்
குலந்தழைக்க எழுந்திட்டார் தமிழர் என்பார்
குறைவகற்றும் நிறைகவிதை தமிழிற் கண்டார்
நலந்தழைக்கச் சங்கத்தார் வகுத்த ஏடாம்
நல்லமுதக் குறுந்தொகைக்கு ஞாலம் ஈடோ!

Koviloor Digital Library

### குருவாழ்த்து

எண்ணியநல் எண்ணமெலாம் எழுங்கவிதை
வடிவென்கோ இன்பில் பூத்த

தண்ணியசீர் பைந்தமிழே தாயாகிப்
பெற்றெடுத்த நூல்கள் எல்லாம்

நண்ணியவோர் வடிவென்கோ நாள்மலரின்
வடிவென்கோ என்றன் ஆசான்

கண்ணியநல் மணியாகும் தேசிகனர்
கலைவடிவாம் அவர்தாள் போற்றி!

### அழகப்பர் வாழ்த்து

என்னகத்துக் கவிப்பொருளை எழிலறமாம்
கதிர்வீசும் இளஞா யிற்றைத்

தன்னகத்துச் சார்ந்தாரைத் தானகக்
கண்டருளும் திங்கள் தன்னைத்

தென்னகத்துப் புகழோங்கத் தெளிஞானக்
கலைக்கோயில் கட்டு வித்த

மின்னகத்து மென்முகிலை அழகப்ப
வள்ளலையே வாழ்த்தி வாழ்வாம்!

Koviloor Digital Library

### தொடக்கம்

கரும்புநிகர் பொற்கொடியாள் நடன மாடக்
கத்தூரி புழுகுசவ் வாது வீச

அரும்புமிள மாதொருத்தி அருகி ருக்க
அள்ளுசுவை இதழ்த்தேனைப் பருகும் பேற்றை

விரும்புகின்ற மக்கள்வாழ் இக்கா லத்தே
"விழை காமம் பொழுதறியின் பொய்யே" என்ற

பெரும் புலமைத் தமிழ்வல்ல அள்ளூர் முல்லைப்
பேராசான் அகப் பொருளும் பொன்னே யன்றோ!

### மெய்க்காமம்—வாழ்வில்

முளை மதியில் ஒதுப்புறத்தே காண்பார் கண்ணில்
முழுநேர வேலைக்கே ஏகும் சந்தில்

விளைகதிரை யறுக்குங்கால் வேலி யோரம்
விளையாடி மகிழ்கின்ற புன்சி ரிப்பில்

தளையவிழும் வெண்பூக்கள் தலையிற் றுங்கித்
தளிர்நடையில் ஆண்மகனை நோக்கும் போக்கில்

விளைகின்ற ஆசைக்கே காம மென்று
விதிவகுக்கும் நாவல்கள் கோடி! கோடி!

Koviloor Digital Library

இருக்கின்ற மனையாளின் எண்ணம் ஓரார்
எழுந்துவரும் தன்னுசை உந்த லாலே
கருக்கொள்ளும் நினைவுக்கைப் பாவை யாகிக்
காமப்பொய் தருசுகமே காப்பர் ஆண்கள்
உருக்கொண்ட வாளொக்கும் கண்ணாள் நாளும்
உள்ளத்தைத் தொட்டிழுக்கச் சொத்தி ழந்து
தெருக்கொண்டு திரிகின்ற காமப் பித்தர்
தெளிஞானச் சித்தர்போல் அலைவார் கோடி!

அரிசிக்கும் ஆடைக்கும் அல்லற் பட்டே
அவையடையக் காமவலை வீசிப் பின்னர்
மருவியவள் பொருள்கவர்ந்து எட்டிக்காயாய்
மறுகணத்தே வெறுத்தொதுக்கும் கயவர் உண்டு
அருவிநேர் கண்சோர அழகு நீங்க
அடைகாத்த கற்பெல்லாம் பருந்து கொள்ளப்
பொருளிழந்து வாடுதலாம் பொழுத றிந்தார்
பொய்க்காமப் புலனறிந்த பெண்கள் கோடி!

Koviloor Digital Library

ஆணோடு பெண்ணினத்தைச் சேர்த்து வைக்க
அம்மலரோன் வரவிடுத்த தூதோ காமம்

நாணகற்றிக் கூடுதற்குக் காம வேள்தான்
நாணேற்றித் தொடுத்துவிட்ட மலரோ காமம்

காணுகின்ற பொருளிலெலாம் விதிவ குத்த
கண்கட்டி வித்தையதோ காமம், இன்பம்

பேணுகின்ற போழ்தினிலே பெயர்ந்து விட்டால்
பெரும்பொய்யாய் மாறிடுமே காமக் கோலம்!

## மெய்க்காமம்

உயிரினொடு உயிர்சேரும் உணர்வே காமம்
ஒருபோதும் பிரிவறியா உறவே காமம்

பயில்கின்ற கலைஞானப் பண்பே காமம்
பண்ணோடு கலந்துவரும் பாட்டே காமம்

Koviloor Digital Library

அயலின்றி ஆட்கொள்ளும் அழகே காமம்
அறமாகி நெஞ்சளிக்கும் அன்பே காமம்

செயலொன்றும் அருள்மோனத் தவமே காமம்
சித்தத்தில் ஒன்ருகும் காமம் மெய்யே!

*[11-11-1960 இல் காரைக்குடி அழகப்பா கல்லூரிக் கலை விழாக் கவியரங்கம்.]*

Koviloor Digital Library

# கவிஞர்

Koviloor Digital Library

Koviloor Digital Library

# திருவள்ளுவர்

மண்ணுலகச் செம்பயிர்தான்
வாடா நிலையருள
விண்ணுலகில் தோன்றும்
விரிமழையை — எண்ணுலகில்

பேரறிவுக் கண்மறையப்
பேச்சற்ற மக்களுக்கு
நேரறிவுக் கண்திறந்த
நேர்கவியைப் — பாரதனில்

பெண்பாலும் ஆண்பாலும்
பெற்றியுடன் வாழ்வதற்கே
பண்பாம் வழியுரைத்த
பாமுனியைக் — கண்ணாலே

Koviloor Digital Library

காணுக் கருமைக்
கடலாம் கருத்துலகில்

மாண்பாய் ஒளிகாட்டும்
மாவிளக்கைத் — திண்மையுறும்

பெண்மை நிலைகனிந்த
பெட்டகத்தைப் பேர்நட்பை

உண்மைச் சுடரை
உலகியலை — வண்மையை

உள்ளுணர்வில் பூக்கும்
உவகைத் திருவருளைத்

தெள்ளு தமிழ்தந்த
தேவை, திரு — வள்ளுவனை

ஓங்கு புகழ்பாடி
உள்ளத் திருத்தியே

பாங்குற்று வாழ்வோம்
பணிந்து!

Koviloor Digital Library

# குருதேவர்

1

திருவிளக்கே அறிவூற்றில் தோய்ந்தெ ழுந்து
தெளிஞான அருளமுத ஒளிப டைத்துத்
தருவிளக்கே நிலைவிளக்காய் மண்ணில் தோன்றித்
தலையாய அறங்கூறி இருள கற்றும்
பெருவிளக்கே கல்விவளர் குருகு லத்தைப்
பெருங்கொடையால் நாட்டுவித்துப்புகழேகொண்ட
குருவிளக்கே! கவிவானில் பிறங்கி வாழும்
குருதேவே! உன்னடியைப் பணிகின் றேமே!

2

பூப்படைத்தான் பொழுதேக இறைவன் தானும்
பூமலர்த்தும் பொற்கதிராம் உருவும் ஆனான்
பாப்படைத்தாய் விளையாட்டாய்ப் பாரில் நீயும்
பாமலர்த்த வரும்பரிதிக் கவிஞன் நீயே
நாப்படைத்த பேரறிஞர் நாத வீணை
நானிலத்தில் கிடைத்ததென வாழ்த்தி நின்றார்
நீப்படைத்த கவிமொழியோ தெய்வ ஏடாம்
நின்புகழும் பொன்னெழுத்துச் சொற்கள் அன்றோ!

Koviloor Digital Library

3

கல்லெடுத்துச் சிற்பியவன் கலையை ஏற்றிக்
கவின்வண்ணச் சிலைவடிவில் கண்டு தந்தான்
புல்லெடுத்து மலையகற்ற வந்த காலப்
புதுவெள்ளம் அச்சிலையை அழித்த தம்மா
சொல்லெடுத்துக் [1]கவிமாலை ஈசனுக்கே
சுனைநீரின் குளிர்மையிலே குழைத்தெ டுத்தாய்
வில்விடுத்த அம்பாகிக் காலம் வென்று
விளைகவிதை நிலைபொருளாய் நிலைத்ததன்றே!

4

கன்னல்நேர் சுவைப்பொருளோ [2]காதற் கண்கள்
கலைப்பஞ்சில் பிரித்தெடுத்த பாவு தானோ
மின்னலென விரைந்துணர்த்தும் சிறுகதைகள்
மிஞ்சுமெழில் [3]வளர்பிறையோ குழவிப்பாக்கள்
அன்னமென ஆயிழையார் கருவைத் தாங்கி
அடிபெயர்க்கும் இன்புலகோ நெடுங்க தைகள்
பொன்னுருவில் பொலிவூட்டும் கவிதைக் கொத்தோ
பூவுலகம் காணாத புதுமைச் செல்வம்!

---

1. கீதாஞ்சலி, 2. காதற்கண்கள், 3. வளர்பிறை

Koviloor Digital Library

# கவிமணி

முந்துதவும் தென்மொழியாம்
　　முத்தமிழை எந்நாளும்
தந்துதவும் தேவித்
　　தலமடைந்தேன்—வந்ததுமே
அன்பு மொழியும்
　　அருவிருந்தும் தாமளித்தார்
இன்பப் பொருளா
　　யிருந்து!

புத்தம் புதியதமிழ்
　　பூவுலகில் தாம்வளர்த்து
நித்தந் தவஞ்செய்யும்
　　நீள்புகழோன்—வித்தகன்
தேசிகவி நாயகத்தின்
　　தேன்கவிதை யத்தனையும்
காசினியிற் கற்கண்டே
　　காண்!

Koviloor Digital Library

கொஞ்சு மொழியும்
    குலவிவரும் சொல்லழகும்

பிஞ்சு மொழியாகப்
    பேசுமே—நெஞ்சுதனில்

பூவினிக்கத் தேன்வடியும்
    புத்தேரி வாழ்கவிஞன்

பாவினிக்கப் பாடும்வெண்
    பா!

Koviloor Digital Library

# திரு. வி. க.

உண்மையின் உருவம் தானே!
உழைப்பினுல் உயர்ந்த செம்மல்

திண்மையாய் நிற்கும் ஆற்றல்
திரு. வி. க. எண்ணச் செல்வம்

வண்மையால் அள்ளித் தந்த
வளந்தமிழ் கோடி கோடி!

பெண்மையால் இலங்கும் பண்பைப்
பேசவும் படுமோ வாழி!

கல்லினில் வழிந்தே ஓடும்
கனிச்சுவை ஓடை தானே!

இல்லினில் நிலேத்தே வாழும்
எழிலுடைக் காதல் தானே!

புல்லினில் தோன்றும் காலேப்
புதுமையின் வடிவு தானே!

சொல்லினில் வடிக்க வொண்ணுத்
திரு. வி. க. அன்பு தானே!

Koviloor Digital Library

# பாரதி

## பாரதியார் வாழ்த்து

துன்புற்றே அடிமைகளாய்க் கிடத்தல் கண்டான்
துடிதுடித்தான் தேசிய கீதந் தந்தான்
மென்புழுவாய்த் தமிழெரெலாம் மெலிதல் கண்டான்
மேதினியில் சமுதாயப் பாடல் செய்தான்
அன்புநெறிக் காதலிலே தெய்வங் கண்டான்
அழகுறவே ஆய்ந்தளித்தான் கண்ணன் பாட்டு
மன்பதைக்கு வழிகாட்டி வாழ்வ ளித்த
மாகவிஞன் பாரதியை அஞ்ச லிப்பாம்!

* *

பாடுபட்டுப் பாரதியை அழைத்து வந்தே
பாராட்டிப் பயனடைந்த சங்கத் தீரே!
கூடுவிட்டுப் பாய்வதுபோல் பறந்த லேந்து
கொள்கைக்கும் தமிழுக்குஞ் சேவை செய்தே
ஈடுபட்டுக் கம்பனருள் இராம காதை
இயல்பெல்லாம் முற்றுணர்ந்த தலேவ! இந்த
நாடுமுற்றுந் தாமறிந்த தமிழைச் செப்பி
நலங்கொழிக்கும் நற்புலவீர்! வணக்கம் கொள்வீர்!

* *

Koviloor Digital Library

புத்தர்தம் போதனையைப் பூவுலகம் போற்றுகின்ற
தத்துவமாம் வள்ளுவத்தை வங்கமுனி வாய்மொழியை
உத்தமராம் காந்தி உரைத்திட்ட நற்கருத்தை
அத்தன் விவேகஆ னந்தன் அருள்மொழியைத்
தித்திக்கும் நற்பாவால் தேர்ந்தெடுத்த நல்லுரையால்
நித்தம் பரப்பும் நிறைந்தஇச் சங்கமதை
சத்தியம் நிற்கத் தருமஒலி செய்கின்ற
முத்திதரும் வேத முரசாகு மென்றுஅன்று
வித்தகனும் பாரதி யும்வியந்து பாராட்டத்
தத்துபுகழ் பெற்றஇச் சங்கத்தார் அன்னவர்க்கே
ஏற்ற புகழ்பாடும் இந்நாளும் நன்னாளே
போற்றிக் கவிபுனையப் போந்ததுவும் என்பேறே
சித்தம் மலர்கின்ற செய்ய தமிழ்க்கவிதை
தித்திக்க நின்றுரைக்கும்சீர்ப்புலவன்தொண்டொன்றால்
நித்தம் உயர்கின்ற நேராளன் காந்திவழி
சத்தியத்தைப் பாடும் தமிழ்ச்செம்மல் ராய.சொ
இத்தகைய பேரரங்கில் ஏறுகநீ என்றுதமிழ்ப்
பித்தன் எனைப்பிடித்துத் தள்ளிவிட்டார் என்செய்வேன்
புத்தம் புதுக்காதல் வாழுலகக் காதலிபோல்
ஒத்திங்கு நிற்கின்றேன் ஓர்ந்து!

* *

Koviloor Digital Library

நானிருப்பேன் ஒருநாளும் அழிவ தில்லை
நாயகனும் இராமனுடன் கண்ணன் ஏசு
தானழிந்தார் புத்தனுக்கும் வாழ்வே யில்லை
தமிழறிந்தேன் ஆதலினால் இறப்பதுண்டோ!
வானிருந்தே அமுதுண்டு செருக்கு வார்போல்
வாக்கினிலே சொல்படைத்தேன் என்று தன்னைத்
தேன்நிறைந்த சொல்லாலே காட்டு கின்றான்
தெளிவுடைய பாரதியாம் கவிஞன் கண்டீர்!

கல்லின்மேற் கல்லைப்போல் சொல்ல டுக்கிக்
காட்டுகின்ற கவிப்புலமை எல்லாம் மாயச்
சொல்லுஞ்சொல் ஒவ்வொன்றும் சுடர்விட் டோங்கிச்
சுழல்கின்ற பம்பரமாய்க் கேட்ட உள்ளம்
புல்லொன்றே யானாலும் வயிர மாகும்
பொலிவெய்தி வீரந்தான் பொழிந்து நிற்கும்!
நில்லென்று தெய்வத்தை முன்னி றுத்தி
நீவரங்கள் தாவென்றான் இவன்போல் உண்டோ!

உள்ளத்தே உண்மையொளி கண்டார்க் கன்றி
உரையினிலே செயலினிலே ஒளியுண் டாமோ!
வெள்ளைத்தா மரையிருக்கும் செல்வி தன்னை
வேதத்தின் திருவிழியைச் சொல்லொன் றாலே

Koviloor Digital Library

கள்ளத்தை நானகற்றி என்றும் வாழக்
காட்டடிஎன் தாயென்று கதறு கின்ருன்
கொள்ளத்தான் குறையாத தேன்குடங்காண்
குயிற்பாட்டில் குமுறுகின்ற காதல் உள்ளம்!

பெற்றெடுத்த நாட்டின்கீழ் நிலையைக் கண்டு
பேரடிமை தகர்ப்பதையே மூச்சாய்க் கொண்டான்
வெற்றுரையை வாய்வீச்சை வெறுத்தொ துக்கி
வேண்டுவது செயலொன்றே என்று ரைப்பான்
கற்றபிற மொழியடிமை நோய கற்றிக்
கனிமொழியை உயிர்த்தமிழைப் போற்றி யிங்கு
நிற்றலொன்றே பேறென்பான் நித்தம் வாழ்வில்
நினைப்பெல்லாம் தமிழிடத்தே வைப்பா யென்பான்!

அருந்தமிழே அதன்சொல்லே உயர்வா மென்பான்
அமிழ்தென்பான் தாயென்பான் வணங்கு கென்பான்
வருந்தந்தை நாடென்ருல் வாழும் மூச்சில்
வளர்கின்ற பெருஞ்சக்தி பிறக்குமென்பான்
பொருந்துகின்ற வாழ்வினிலே கவலை நீக்கிப்
பொல்லாத கலியினையே பிளப்ப மென்பான்
திருந்திடவே பழமறையின் பொருளைக் கொண்டு
தெவிட்டாத காவியங்கள் தீட்டு கென்பான்!

Koviloor Digital Library

பல்வேறு மனத்தகத்தின் ஏற்றத் தாழ்வை
படிந்திருக்கும் சிறுமையினைக் கலைக்கு நாமே
வல்லார்கள் எனச்செருக்கும் தீய போக்கை
வாயடியால் பிழைக்கின்ற வாத நோயை,
எல்லாமே கண்டறிந்து வருந்தி நாளும்
ஈடற்ற இன்பவழி காணு தற்கு
நல்லாக்கச் சமுதாயத் திருத்தம் செய்தான்
நானிலத்தின் நற்கவிஞன் அறிவின் மிக்கான்!

பாஞ்சாலி சபதம்போற் காவி யத்தைப்
பாரதநன் னூல்களிலே பார்த்த துண்டோ?
பூஞ்சோலை வனப்பன்றோ கண்ணன் பாட்டு
பொற்றேரின் அமைப்புத்தான் சக்திப் பாடல்
நாம்மகிழ அணைக்கின்ற பாப்பாப் பாடல்
நலஞ்சேர்க்கும் மருந்தன்றோ நாடு வாழத்
தாம்சூழ்ந்த வினையெல்லாம் போக்கு மன்றே
தத்துவநூல் பாரதியார் அறுபத் தாறே!

சித்தன்போல் வாழ்ந்தாலும் ஆத்தி சூடி
சிறுவர்க்காச் செய்திட்டான் புதுமை யாக
கைத்தொழிலைப் போற்றென்றான் நன்றே எண்ணிக்
கட்டவிழ்ந்த நெல்லிக்காய் மூடை யாக

Koviloor Digital Library

இத்தரையில் சிதருதீர்! ஒத்து வாழ்வீர்!
ஏறுபோல் நடந்திடுவீர்! மறப்பீர் துன்பம்!
ஒத்தகுணச் சேர்க்கையுமே அழிந்து வாழேல்!
ஓதிடுக என்றுரைத்தான் நீதி நூலே!

நிலையுயரத் தாம்வாழார் நித்தம் வாழ்வில்
நினைப்பெல்லாம் தம்பொருளே பெருகக் காண்பார்
விலைமதிப்பார் பிறர்பொருளை அதனை எண்ணி
விழைந்திடுவார் பேராசை வெறியர் ஆவார்
தலையாய பொருள்ஒன்றே காத்து நிற்பார்
தாம்வாழ்ந்தும் இறந்தோரே என்று கூறிக்
கலையூட்டும் அவன்பாட்டோ புதுமை ஏடாம்!
காலத்தை வெல்லுகின்ற கருத்துச் செல்வம்!

Koviloor Digital Library

காவியத்தால் கட்டுரையால்
காலம் பெறவரிய
பாவினத்தால் பாட்டிசைத்த
பாரதியை — மேவிநிதம்
வந்திப்போம் கைதொழுவோம்
வாழ்த்திடுவோம் எந்நாளும்
சிந்திப்போம் என்றே
தெளி.

[*27—5—56* ஆம் தேதி ஹிந்துமதாபிமான சங்க ஆண்டு விழாக் கவியரங்கில் சொ. முருகப்பனுர் தலைமையில் பாடப்பெற்றது].

Koviloor Digital Library

Koviloor Digital Library